මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/NSLE/103/DMD/09/2025
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2026-01-08

**வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை இல. 08/2025(ii)**

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
அனைவருக்கும்

**அனர்த்தத்தினால் சேதமடைந்த உட்கட்டமைப்புவசதிகளை மீள்கட்டியெழுப்பல் மற்றும் மக்களின் வாழ்வினை இயல்பு நிலைக்குக் கொண்டுவருதல் நிகழ்ச்சித்திட்டம்**

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்த்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் கட்டியெழுப்புதல், மக்களின் அன்றாட வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவருதல், பாதிக்கப்பட்ட மக்களை வலுவூட்டுதல் மற்றும் சேதமடைந்த உட்கட்டமைப்பு வசதிகளை விரைவாக மீள்கட்டமைத்தல் ஆகியவற்றுக்கான செலவுகளை ஈடுசெய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை வழங்கும் வகையில், 2025.12.19 அன்று பாராளுமன்றம் ரூ. 500 பில்லியன் குறைநிரப்பு மதிப்பீட்டை அங்கீகரித்துள்ளது.

02. 2026 ஆம் ஆண்டுக்கான செலவினங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, அனர்த்தத்தினால் சேதமடைந்த உட்கட்டமைப்பு வசதிகளை மீள்கட்டமைப்பதற்கும் இயல்பு வாழ்க்கையை மீள ஏற்படுத்துவதற்கும் இந்த நிதி ஏற்பாடுகள் வழங்கப்படும்.

03. "அனர்த்தங்களுக்கு பதிலளிக்கும் விதமாக பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டுதல்கள், இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புதல்" என்ற தலைப்பின் கீழ் திறைசேரி செயலாளரால் வெளியிடப்பட்ட 2025.12.30 ஆந் திகதிய NP/ENM/DIM/PDNA/2025 ஆம் இலக்க வழிகாட்டுதல்களின்படி நடவடிக்கை எடுத்து, உங்கள் நிறுவனத்தின் எல்லைக்குள் சேதமடைந்த உட்கட்டமைப்பை மறுசீரமைத்தல் மற்றும் புனரமைப்பதற்கான பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 2026 ஆம் ஆண்டுக்குத் தேவையான மேலதிக ஒதுக்கீடுகளுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரைகளைப் பெற்று, இந்த சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 01 இலுள்ள படிவத்தைப் பயன்படுத்தி, தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்துக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

04. மேற்கண்ட வழிகாட்டுதல்களால் உள்ளடக்கப்படாத, அனர்த்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட பொது மக்களின் இயல்பு வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கான கொடுப்பனவுகள் மற்றும் இழப்பீட்டு கொடுப்பனவுகளுக்கான 2026 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய அமைச்சு / நிறுவனம், இந்த சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 02 இல் உள்ள படிவத்தைப் பயன்படுத்தி தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்துக்கு அவசரமாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

05. மேற்படி 01 மற்றும் 02 பின்னிணைப்புகளை கீழே உள்ள QR குறியீட்டைப் பயன்படுத்தி பதிவிறக்கம் செய்யலாம்.

**ஒப்பம்/-**
**கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதி:
1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. தலைவர், நிதி ஆணைக்குழு
5.கணக்காய்வாளர்

பின்னிணைப்பு I

## அனர்த்தத்தினால் சேதமடைந்த உட்கட்டமைப்பு வசதிகளின் மறுசீரமைப்பு / புனரமைப்பு (பொது முதலீட்டு இயல்புடையது)

| அமைச்சு / திணைக்களம் / நிறுவனம் | கருத்திட்டம்/ நிகழ்ச்சித்திட்டம்/ ஒப்பந்த திட்டத்தின் பெயர் | தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட திகதி | தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட மொத்த மதிப்பிடப்பட்ட செலவு (ரூ. மில்.) | 2026 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீட்டுத் தேவை (ரூ. மில்.) | 2026 இற்குத் தேவையான மொத்த ஒதுக்கீட்டில், 2026 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளிலிருந்து நிர்வகிக்கக்கூடிய ஒதுக்கீட்டின் அளவு (ரூ. மில்.) | 2026 ஆம் ஆண்டுக்கு மேலேதிக ஒதுக்கீட்டுத் தேவை (ரூ. மில்.) | கருத்திட்டம் தொடங்க எதிர்பார்க்கப் படும் மாதம் | கருத்திட்டத் தை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப் படும் மாதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

அமைச்சின் செயலாளர் / மாகாண சபையின் பிரதம செயலாளரின் பரிந்துரை:

பின்னிணைப்பு II

**அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுப்பனவு மற்றும் இழப்பீடு வழங்குவதற்கான நிதி ஏற்பாடுகளின் தேவை**

| நிதி வழங்கப்பட வேண்டிய அமைச்சு /திணைக்களம் / நிறுவனம்[1] | கொடுப்பனவின் பெயர்2 | பயநாளர்களின் எண்ணிக்க | 2026 ஆம் ஆண்டுக்குத் தேவையான ஏற்பாடுகள் (ரூ. மில்லியன்) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

அமைச்சின் செயலாளர் / மாகாண சபையின் பிரதம செயலாளரின் பரிந்துரை:

1. விண்ணப்பங்கள் வரவுசெலவுத்திட்டச் சுற்றறிக்கை இல. 08/2025 இன் பின்னிணைப்பு I இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகளை வழங்கும் செலவினத் தலைப்பின் கீழ் செய்யப்படல் வேண்டும்.

2. அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு / கொடுப்பனவுகளை வழங்குவதற்கான வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கைகள் இல. 08/2025, 08/2025(i) மற்றும் தொடர்புடைய அமைச்சரவை தீர்மானங்களின்படி வழங்கப்பட்ட கொடுப்பனவுகள்.